**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 287 நாள்: 13.07.2026

**அடையாறு மண்டலத்தில் ரூ.36 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு மையக் கட்டடத்தினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் இன்று பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு-178, தரமணி, அண்ணா தெருவில் 178ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களின் 2024-25ஆம் ஆண்டு வார்டு மேம்பாட்டு நிதியில் ரூ.36 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பல்நோக்கு மையக் கட்டடத்தினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் இன்று (13.07.2026) பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இந்த பல்நோக்குக் கட்டடம் 714 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. இதனால் மகாத்மா காந்தி நகரைச் சார்ந்த பொதுமக்கள் பயனடைவர்.

இந்நிகழ்ச்சியில், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் திரு.ஆர்.துரைராஜ், மாமன்ற உறுப்பினர் திரு.எஸ்.பாஸ்கரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**